### 25 புதிய நிலக்கரி வாயுவாக்க திட்டங்கள் மூலம்

# நாட்டில் 50 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும்!

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் பதில்!

புதுடெல்லி, ஜூலை 24 -

நாட்டின் எரிசக்தி பாதுகாப்பை வலுப்படுத்தவும், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் எரிபொருட்களின் மீதான சார்பைக் குறைக்கவும் செயல்படுத்தப்பட்டு வரும் நிலக்கரி வாயுவாக்க (Coal Gasification) திட்டங்கள் குறித்து வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் மக்களவையில் கேள்வி எழுப்பினார்.



இதற்கு ஒன்றிய அரசின் நிலக்கரி மற்றும் சுரங்கத் துறை இணை அமைச்சர் சதீஷ் சந்திர துபே அவர்கள் எழுத்து பூர்வமாக அளித்த பதில்

மத்திய அரசின் 8,500 கோடி நிதி ஊக்கத் திட்டத்தின் கீழ் தற்போது 8 நிலக்கரி வாயுவாக்கத் திட்டங்கள் ஒப்புதல் பெற்று பல்வேறு கட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

இந்தத் திட்டங்கள் செயல்பாட்டுக்கு வந்தவுடன், இறக்குமதி செய்யப்படும் இயற்கை எரிவாயு, எத்தனால் உள்ளிட்ட பல்வேறு தொழில்துறை மூலப்பொருட்களின் தேவை குறைவதுடன், ஆண்டுக்கு சுமார் 16,500 கோடி அந்நியச் செலாவணி சேமிக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

மேலும், இந்தத் திட்டங்கள் நாட்டின் எரிசக்தி பாதுகாப்பை வலுப்படுத்துவதோடு, உள்நாட்டு நிலக்கரிக்கு கூடுதல் மதிப்பை உருவாக்கும் என்றும், ரசாயனம், பெட்ரோ கெமிக்கல், உரம், ஹைட்ரஜன் மற்றும் சுத்தமான எரிபொருள் உற்பத்தி போன்ற தொழில்துறைகளின் வளர்ச்சிக்கும் பெரும் பங்களிப்பாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

நிலக்கரி வாயுவாக்கத் திட்டங்களை விரைவாக செயல்படுத்தும் நோக்கில் முதலீட்டாளர்களுக்கு நிதி ஊக்கங்கள், தொழில்நுட்ப ஆதரவு மற்றும் பல்வேறு கொள்கைச் சலுகைகள் வழங்கப்பட்டு வருவதாகவும், இந்தத் துறையில் முதலீடுகளை அதிகரிக்க மத்திய அரசு தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாகவும் அமைச்சர் விளக்கமளித்தார்.

மேலும், 2026 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட புதிய ஊக்கத் திட்டத்தின் மூலம் சுமார் 25 புதிய நிலக்கரி வாயுவாக்கத் திட்டங்கள் உருவாகும் என்றும், ரூ.2.5 லட்சம் முதல் ரூ.3 லட்சம் கோடி வரை முதலீடுகள் ஈர்க்கப்படும் என்றும், 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றும் ஒன்றிய அமைச்சர் தனது பதிலில் தெரிவித்தார். இத்திட்டங்கள் முழுமையாக செயல்பாட்டுக்கு வந்தால் ஆண்டுதோறும் ரூ.1.5 லட்சம் கோடி அளவுக்கு அந்நியச் செலாவணி சேமிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

### நாடு முழுவதும் பிரதான் மந்திரி ஜன் விகாஸ் காரியக்ரம் திட்டத்தின் கீழ்

# கள்ளக்குறிச்சி மக்களவை தொகுதிக்கு ஒதுக்கப்பட்ட நிதி விவரம் என்ன?

## மக்களவையில் தே.மலையரசன் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 24 -

கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன் நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்விகள் வருமாறு:-

நாடு முழுவதும் பிரதான் மந்திரி ஜன் விகாஸ் காரியக்ரம்(PMJVK) திட்டத்தின் தற்போதைய செயலாக்க நிலை, கடந்த 5 ஆண்டுகளில் மாநில வாரியாக, குறிப்பாக தமிழ்நாட்டின் கள்ளக்குறிச்சி மக்களவைத் தொகுதிக்கு ஒதுக்கப்பட்ட விடுவிக்கப்பட்ட நிதிகளின் விவரங்கள் என்ன?

கல்வி, திறன் மேம்பாடு, சுகாதாரம், துப்புரவு மற்றும் அடிப்படை உள்கட்டமைப்பு போன்ற துறைகளில், மாவட்ட வாரியாக, PMJVK திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும், நடைபெற்று வரும் மற்றும் முடிக்கப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை எத்தனை?



திட்டத்தின் கீழ் சிறுபான்மையினர் செறிந்துள்ள பகுதிகளைக் கண்டறியப் பின்பற்றப்படும் அளவுகோல்கள் மற்றும் சமீபத்திய ஆண்டுகளில் அத்தகைய அளவுகோல்களில் ஏதேனும் திருத்தம் அல்லது புதுப்பித்தல் மேற்கொள்ளப்பட்டதா, அப்படியானால் அதன் விவரங்கள் என்ன?

திட்டங்களில் தாமதம், முடிக்கப்படாமை அல்லது செலவு அதிகரிப்பு போன்ற நிகழ்வுகள் பதிவாகியுள்ளனவா, எடுக்கப்பட்ட சரியான நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் என்ன?

வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்குப் பதிலாக, நிதிசார் வழிமுறைகள், ஜியோ டேக்கிங், மூன்றாம் தரப்பு மதிப்பீடு மற்றும் சமூகத் தணிக்கை அமைப்புகள் குறித்த விவரங்கள் என்ன?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

### நாகர்கோவில் மாநகர வடக்குப் பகுதி

# 14 வது வட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் சிறப்புரையாற்றினார்!

கன்னியாகுமரி, ஜூலை 24 -

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர வடக்கு பகுதி, 14 வது வட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டமானது 14வது வட்ட கழக செயலாளர் பி.வேல்முருகன் தலைமையில், நாகர்கோவில் மாநகர வடக்கு பகுதி செயலாளர் இ.ஜவகர் முன்னிலையில் 22.07.2026, புதன்கிழமை அன்று மாலை 6.00 மணியளவில் கிருஷ்ணன் கோவில், வணிகர் தெருவில் அமைந்துள்ள சமூக நலக்கூடத்தில் வைத்து நடைபெற்றது.




கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பாக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த், மாநகர அவைத் தலைவர் ப.பன்னீர்செல்வம், மாமன்ற உறுப்பினர் நெ.கலாராணி, வடக்கு பகுதி துணை செயலாளர் அ.முஸ்தபா, மாவட்ட பிரதிநிதி கு.அணஞ்சபெருமாள், நாகர்கோவில் மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் சி.டி.சுரேஷ் உட்பட பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானம்: 1

விளாத்திகுளம் தி.மு.க சட்டமன்ற உறுப்பினர் திரு. மார்க்கண்டேயன் அவர்களை அராஜகமான முறையில் காவல் துறையினரை ஏவி கைது செய்திருக்கும் த.வெ.க அரசின் செயலை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

தீர்மானம்: 2

வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெறும் வகையில் அதற்கான களப்பணிகளை இன்றே தொடங்கி செயல்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம்: 3

கடந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கழக வேட்பாளருக்காக உழைத்த கழக நிர்வாகிகளுக்கும், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினருக்கும் மற்றும் வாக்களித்த அனைத்து வாக்காள பெருமக்களுக்கும் மாவட்ட தி.மு.கழகம் மற்றும் நாகர்கோவில் மாநகர வடக்கு பகுதி கழகம் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.




மதுரை மாவட்டம் சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட கரட்டுப்பட்டி தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கம் முன்பாக அப்பகுதி விவசாயிகள் நூற்றுக்கும் மேற்பட்டோர் த.வெ.க. தேர்தல் அறிக்கையில் கூறியது போன்று விவசாய கடனை நூறு சதவீதம் முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

### தருமபுரி மாவட்டத்தில் அழைப்பு துண்டிப்பு – மோசமான மொபைல்

# நெட்வொர்க் சேவையினை மேம்படுத்த ஒன்றிய அரசின் நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் தருமபுரி ஆ.மணி கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 24 -

நடைபெற்று வரும் நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் தமிழ்நாட்டின் தர்மபுரி மாவட்டத்தில் உள்ள பல்வேறு கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளில் தொடர்ந்து நிலவி வரும் அழைப்பு துண்டிப்பு (Call Drop) மற்றும் தரமற்ற மொபைல் நெட்வொர்க் சேவை தொடர்பான பிரச்சினைகள் குறித்து ஒன்றிய அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா? அவ்வாறெனில், அவற்றால் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்கள், விவசாயிகள், சிறுவணிகர்கள் மற்றும் அவசர கால தகவல் தொடர்பு சேவைகள் குறித்த விவரங்கள் யாவை?



தர்மபுரி மாவட்டத்தில் அடிக்கடி ஏற்படும் அழைப்பு துண்டிப்பு களுக்கான காரணங்களைக் கண்டறிவதற்காக மாவட்ட அளவில் ஏதேனும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா? இருப்பின், நெட்வொர்க் நெரிசல், போதிய தொலைத்தொடர்பு கோபுரங்கள் இல்லாமை, செல்போன் கோபுரங்களுக்கு இடையேயான சிக்னல் மாற்ற (Handover) குறைபாடுகள் மற்றும் புதிய தொலைத்தொடர்பு கோபுரங்கள் அமைப்பதில் உள்ள கட்டுப்பாடுகள் உள்ளிட்ட காரணங்கள் தொடர்பான விவரங்கள் யாவை?

தர்மபுரி மாவட்டத்தில் கூடுதல் மொபைல் கோபுரங்களை அமைத்தும், தற்போதுள்ள நெட்வொர்க் திறனை மேம்படுத்தியும், மொபைல் தகவல் தொடர்பு உள்கட்டமைப்பை வலுப்படுத்துமாறு தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்களுக்கு ஒன்றிய அரசு அறிவுறுத்த திட்டமிட்டுள்ளதா? ஆம் எனில், அதன் விவரங்கள் என்ன?

தர்மபுரி மாவட்ட மக்களுக்கு தடையற்ற, தரமான மற்றும் நம்பகமான மொபைல் நெட்வொர்க் சேவையை உறுதி செய்வதற்காக ஒன்றிய அரசு மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் என்ன ? மேலும், அவற்றை செயல்படுத்துவதற்கான காலக்கெடு என்ன? என்று

தகவல் தொடர்பு மற்றும் ஊரக வளர்ச்சித் துறை இணை அமைச்சர் டாக்டர் பெம்மசானி சந்திர சேகரிடம் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி கேள்வி எழுப்பி உள்ளார்.

### ஒன்றிய அரசின் விலை ஆதரவு திட்டத்தின் மூலம் - தமிழ்நாட்டில்

# கொள்முதல் பிரச்சினைகளை தவிர்க்க நடவடிக்கை என்ன?

## மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 24 -

தமிழ்நாட்டில் விலை ஆதரவு திட்டம் தொடர்பாக மக்களவையில் கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை எழுப்பிய கேள்விகள் வருமாறு:

வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் பின்வருவனவற்றைத் தெரிவிப்பாரா?

(அ) அறிவிக்கப்பட்ட வேளாண் விளைபொருட்களை குறைந்தபட்ச ஆதரவு விலையில் (MSP) கொள்முதல் செய்வதற்காக, விலை ஆதரவு திட்டம் (PSS) தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளதா? அவ்வாறு செயல்படுத்தப்பட்டிருந்தால், அதன் விவரங்கள் என்ன?

(ஆ) கடந்த மூன்று ஆண்டுகளிலும் நடப்பு ஆண்டிலும் தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் கீழ்:

★ எந்தெந்த வேளாண் விளைபொருட்கள் சேர்க்கப்பட்டுள்ளன?

★ எவ்வளவு அளவு கொள்முதல் செய்யப்பட்டது?

★ எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டது, விடுவிக்கப்பட்டது மற்றும் பயன்படுத்தப்பட்டது?

★ இவை மாவட்ட வாரி யாக என்ன விவரங்கள்?

(இ) இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை, பொருள் வாரியாகவும் ஆண்டு வாரியாகவும் எவ்வளவு?

(ஈ) தமிழ்நாட்டில் கொள்முதல் தாமதம், போதிய அளவில் கொள்முதல் மையங்கள் இல்லாமை மற்றும் விவசாயிகளுக்கு பணம் வழங்குவதில் தாமதம் ஆகியவை தொடர்பாக அரசுக்கு புகார்கள் வந்துள்ளனவா? அவ்வாறு இருந்தால், அவற்றை சரிசெய்ய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன?



(உ) விலை ஆதரவு திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில்:

★ கொள்முதல் உள்கட்டமைப்பை வலுப்படுத்த,

★ திட்டத்தின் பயன்பாட்டை விரிவுபடுத்த,

★ விவசாயிகளுக்கு நியாயமான மற்றும் இலாபகரமான விலை கிடைப்பதை உறுதி செய்ய,

அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.

அதற்கு ஒன்றிய வேளாண் இணை அமைச்சர் விரிவாக பதிலளித்திருந்தார்.

### ஆசிரியை தம்பதி வீடு உள்பட

# திருச்சியில் 3 வீடுகளை உடைத்து ரூ.1 கோடி நகைகள் கொள்ளை!

திருவெறும்பூர், ஜூலை 24-

ஆசிரியர் தம்பதி உள்பட 3 வீடுகளை உடைத்து 1 கோடி ரூபாய் மதிப்பு நகைகளை மர்ம நபர்கள் கொள்ளையடித்து உள்ளனர்.

திருச்சி வடக்கு காட்டூர் அந்தோணியார் கோயில் தெருவைச் சேர்ந்த ஆசிரியை தம்பதி மரியன் ஸ்டீபன் (45). ஆரோக்கியம். இவர்கள் அங்குள்ள பள்ளியில் பணியாற்றி வருகின்றனர். நேற்று காலை இருவரும் வீட்டை பூட்டி விட்டு வேலைக்கு சென்று விட்டு அன்றைய தினம் மாலை வீட்டுக்கு வந்தனர். அப்போது வீட்டின் கதவின் பூட்டு உடைக்கப்பட்டு பீரோவில் வைத்திருந்த செயின், மோதிரம் உள்பட 32 பவுன் நகையை மர்ம நபர்கள் திருடிச் சென்றிருப்பது தெரியவந்தது.

இது குறித்து மரியன் ஸ்டீபன் அளித்த புகாரின் பேரில், திருவெறும்பூர் போலீசார் வழக்குபதிவு செய்துள்ளனர்.

துவாக்குடி அருணாபுரி நகரை சேர்ந்தவர் கோவிந்த ராஜ் (38). இவர் காரைக்காலில் உள்ள ஓஎன்ஜிசி நிறுவனத்தில் பணியாற்றுகிறார். இவரது மனைவி ரம்யா. இவர்களுக்கு தமன் சங்கர், விபாகர் என்ற மகன்கள் உள்ளனர். ஓஎப்டி தொழிற்சாலை பகுதியில் உள்ள பள்ளியில் படித்துவரும் இருவரையும் விடுவதற்காக நேற்று காலை 8 மணிக்கு வீட்டை பூட்டி விட்டு ரம்யா சென்றார்.

இதன் பின்னர் துவாக்குடி பெல் நகரில் மாமியார் வீட்டில் இருந்து நேற்று மாலை வீடு திரும்பிய போது வீட்டு மாடியில் உள்ள கதவு பூட்டை மர்ம நபர்கள் உடைத்து உள்ளே சென்று 40 பவுன் நகையை கொள்ளையடித்து சென் றது தெரியவந்தது.


பொன்மலைப்பட்டி தென்றல் நகரை சேர்ந்தவர் டேவிட் (53). இவரது மனைவி புஷ்பா, 2 குழந்தைகளுடன் வசித்து வருகிறார். கடந்த 18ம்தேதி கேரளாவில் உள்ள உறவினர் வீட்டு நினைவு நாள் நிகழ்ச்சிக்கு சென்று விட்டு நேற்று முன்தினம் இரவு வீட்டுக்கு வந்தனர். அப்போது வீட்டு பூட்டை உடைத்து 38 பவுன் நகை கொள்ளைப் போனது தெரிந்தது.

திருச்சியில் அடுத்தடுத்து 3 வீடுகளை உடைத்து சுமார் 110 பவுன் நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இதன் மதிப்பு ரூ.1.10 கோடி.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா எம்.எஸ். அப்துல் மஜீத்

### ஜூலை 24 (2016)



ஒன்றிணைந்த திருச்சி மாவட்டத்தில் இருந்த புதுக்கோட்டை நகர துணைச் செயலாளர், தொடர்ந்து 17 ஆண்டுகள் நகரச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், புதுக்கோட்டை மாவட்ட அவைத்தலைவர், மாவட்ட பொறுப்புக்குழு செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகம் வளர பாடுபட்டவர்.

அறந்தாங்கி மாநாட்டு செயலாளராகவும், சேலம் சிறப்பு மாநிலச் செயலாளராகவும், புதுக்கோட்டை மாவட்டக் கழக கட்டிடக்குழு செயலாளராகவும் பணியாற்றியவர்.

புதுக்கோட்டை நகர வங்கி தலைவராகவும், புதுக்கோட்டை நகர்மன்ற உறுப்பினராகவும் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த கருப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு ஆறு மாதங்களும் – நெருக்கடிகால மிசா சட்டத்தில் 15 மாதங்களும் சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.